**செய்தி வெளியீடு எண்: 511** **நாள்: 31.08.2012**

நாளிதழ்களில் 30.8.2012 மற்றும் 31.8.2012—ல்
பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தைப் பற்றி வெளிவந்த செய்திகளுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.பி.முனுசாமி அவர்களின் மறுப்பு அறிக்கை

நேற்றைய தினம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு.ஞானதேசிகன் அவர்கள் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ரூ.3000 கோடி ஒதுக்கப்பட்டதாகவும், அந்நிதியை பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கவில்லையென்ற உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை வெளியிட்டிருக்கின்றார். தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் செயல்பாடுகள் பற்றி தெரிந்துகொள்ளாமலும், இத்திட்டத்தைப் பற்றி புரிந்துகொள்ளாமலும், நுனிப்புல் மேய்வதுபோல ஒரு தவறான செய்தியை வெளியிட்டிருப்பது அவருடைய அறியாமையை காட்டுகின்றது. ஒரு தேசிய கட்சியின் மாநிலத் தலைவராக இருக்கின்றவர் உண்மைக்கு மாறான செய்திகள் வெளியிடுவது வன்மையாக கண்டிக்கத் தக்கது.

இத்திட்டம், 2000—ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 2000—ம் ஆண்டிலிருந்து 2009—ஆம் ஆண்டு வரை மத்திய அரசால் ரூ.2024 கோடி நிதி ஒதுக்கப்பட்டு 9,984.32 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

2008—09ஆம் ஆண்டுக்குப் பின்னர் மத்திய அரசு இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த சில நெறிமுறைகளை கொண்டு வந்தது நம் மாநிலத்திற்குப் பொருந்தாத காரணத்தினால் புதிய நிதி ஒதுக்கீடு எதுவும் நம் மாநிலத்திற்கு செய்யவில்லை. இதன்படி, 1000 மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள இணைப்புச் சாலைகள் இல்லாத கிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைத்தல், இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள 33 மாவட்டங்களில் இணைப்புச் சாலைகள் மற்றும் எல்லைப் பகுதியில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சிறப்பு சாலைகள் அமைப்பதற்கு மட்டுமே இத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமென மத்திய அரசு அறிவித்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 1991ம் ஆண்டு முதன்முறையாக முதலமைச்சராக பதவியேற்றபொழுது தமிழ்நாட்டில் உள்ள 1000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள சாலை வசதி இல்லாத குக்கிராமங்கள் தமிழகத்தில் இருக்கக்கூடாது என ஆணையிட்டு, திட்டமிட்டு சாலை அமைக்கப்பட்டதன் காரணமாக இன்றைக்கு 1000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள சாலை வசதி இல்லாத குக்கிராமங்களே இல்லையென்ற நிலை உள்ளது.

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்வது வஞ்சிக்கப்படுகிறது என்ற அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 6.7.2011

அன்று புதுதில்லியில் நடைபெற்ற 2011–12ஆம் ஆண்டின் தமிழ்நாட்டிற்கான ஆண்டு திட்டத்தினை இறுதி செய்யும்பொழுது, தமிழகத்திற்கு பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தின் கீழ் நெறிமுறைகள் தளர்த்தப்பட்டு போதிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென எடுத்துரைத்ததன் அடிப்படையில், மத்திய அரசு ஓரளவு தளர்த்தியுள்ளது.

மத்திய அரசு, 1000 மக்கள்தொகைக்கு அதிகமான கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்பதை தற்பொழுது 500 முதல் 999 வரை மக்கள்தொகை கொண்ட கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை அமைப்பதற்கான நிதியுதவி இத்திட்டத்தின் கீழ் பெறலாம் என தளர்த்தியது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம் மாநிலத்திலுள்ள 79,394 குக்கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் அமைக்க வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள். அனைத்து குக்கிராமங்களிலும் நகர்ப்புறங்களுக்கு ஈடான அடிப்படை வசதிகள் கிடைக்க வேண்டுமென ஆணையிட்டு, தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 1430 கோடி ரூபாய் செலவில் பல்வேறு கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன என்ற விவரம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. அனைத்து கிராமங்களும் முழுமையான வளர்ச்சி பெற வேண்டும் என்ற அடிப்படையில் மத்திய அரசின் நிதியை எதிர்பாராது, மாநில அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்பதை நாட்டு மக்கள் அறிவர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாநில அரசு, மத்திய அரசு திட்டங்கள் என்ற வேற்றுமை பாராது கிராமங்களில் வாழும் மக்கள் சமூக பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்ற ஒரே நோக்குடன் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள் என்ற விவரம் கூட தெரிந்துகொள்ளாமல், மத்திய அரசிடமிருந்து பெறுகின்ற தகவல்களைப் சரிவர புரிந்துகொள்ளாமல் இதுபோன்ற உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் (ம)
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**